1st November 1962]

எழுதிக்கொண்டிருக்கிறார்கள். "இங்கே ஒரு நிமிஷம் நிறுத்தினல் நலலது, அங்கே இரண்டு நிமிஷம் நிறுத்தினல் தேவலே" என்று எழுதுகிறார்கள். இது எக்ஸ்பிரஸ் பஸ்ஸாக இருக்கின்ற காரணத்தினல, 25 மைல்களுக்கு இடையிலே நிறுத்த முடியாது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

சாதி ஒழிப்புத் திட்டம்

*1070-ட. கேள்வி.—திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : திரு. மு. ரா. கிருஷ்ணமூர்த்தி : } கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் சாதி ஒழிப்புப்பற்றி அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துள்ளனர் ?

(இ) கலப்பு மணம் செய்துகொள்பவர்களுக்கு அரசாங்கம் ஏதாகிலும் விசேஷ சலுகைகள் தருகிறதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) The attention of the hon. Member is invited to reply given on 26th July 1962 to a question on the same subject by the hon. Member Sri A. K. Subbiah.

(b) No, Sir.

மலைஜாதியினருக்கு ஹாஸ்டல் கட்டுதல்

*1070-யு. கேள்வி.—திரு. எல். ஆனந்தன் : கனம் விவசாய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

கள்ளக்குரிச்சி தாலுக்காவிலுள்ள கலுவராயன் மலையில் வசிக்கும் மலைஜாதியினருக்கு மலையின் அடிவாரத்தில் ஓர் ஹாஸ்டல் கட்டி ஹைஸ்கூல் வரை படிக்க வசதி செய்து கொடுக்கும் உத்தேசமுண்டா ?

THE HON. SRI P. KAKKAN : As there are no schools in the Kaluvarayan Hills area, thert is no proposal at present to open a Hostel for Tribal students in that area.

பழத்தோட்டம் அமைத்தல்

*1070-வி. கேள்வி.—திரு. சோ. ஆறுமுகம் : கனம் விவசாய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தென் சேலம் பகுதியில் பழத்தோட்டம் அமைக்க உத்தேசமுண்டா ?

(இ) ஆமென்றால், வீரபாண்டி வட்டாரத்திலுள்ள சித்தர் கோயில் பகுதியில் ஏற்படுத்த உத்தேசமுண்டா ?

THE HON. SRI P. KAKKAN : (a) No, Sir.

(b) Does not arise.